# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - செவ்வியல் உலகம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 60

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) ரோமானிய அடிமை முறையை பற்றி எழுதுக.

**பதில் :** (i) ரோமில் போர்க் கைதிகள் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். இதன்மூலம் பணம்படைத்தோர் சுரண்டுவதற்கு ஏதுவாகப் பெரும் உழைப்பாளர் கூட்டத்தை ரோம் உருவாக்கியது.
(ii) மிகப்பெரும் நிலப்பிரபுக்கள் இவ்வடிமைகளைக் குறைந்த விலைக்கு வாங்கி தங்கள் நிலங்களில் வேளாண் பணிகளில் ஈடுபடுத்தினார்.
(iii) அடிமைகளின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. கி.மு.(பொ.ஆ.மு) முதலாம் நூற்றாண்டில் ரோமில் சுதந்திர மக்களின் எண்ணிக்கை 3.25 மில்லியன்களாக இருந்தபோது 2 மில்லியன் அடிமைகள் இருந்தனர்.

2) கான்ஸ்டன்டைனின் முக்கிய பங்களிப்பை சுட்டிக் காட்டுக.

**பதில் :** (i) ரோமானியப் பேரரசர்களில் ஒருவரான கான்ஸ்டன்டைன் கிறித்தவராக மாறினார்.
(ii) இதனால் கிறித்தவம் ரோமானியப் பேரரசின் அரசு மதமாயிற்று.

3) கார்த்தேஜ் ஹன்னிபால் குறித்து நீ அறிவது என்ன?

**பதில் :** (i) ரோம் மற்றும் கார்த்தேஜ் ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்ற மூன்று போர்கள் பியூனிக் போர்கள் என அழைக்கப்படுகின்றன.
(ii) ஹன்னிபால் என்ற தளபதியை கார்த்தேஜ் பியூனிக் போருக்கு அனுப்பிவைத்தது. ரோமின் படையைத் தோற்கடித்த அவர் இத்தாலியின் பெரும்பகுதியை பாலைவனமாக்கினார்.
(iii) ரோம் படைக்கு தலைமையேற்றிருந்த பாபியஸ், மனம் தளரவில்லை. இரண்டாம் பியூனிக் போரில் ஹன்னிபாலை எதிர்கொண்ட பாபியஸ், ஜாமா போர்க்களத்தில் அவரைத் தோற்கடித்தார்.
(iv) ரோமானியப் படைகளால் பின் தொடரப்பட்ட ஹன்னிபால் விஷமருந்தி மாண்டார்.

4) ஹன் பேரரசின் செழிப்பிற்கான காரணங்கள் யாவை?

**பதில் :** (i) ஹன் பேரரசு மீண்டும் ஒருமுறை பட்டு வணிக வழித்தடத்தை வணிகத்திற்காக திறந்துவிட்டது. பெருமளவிலான ஏற்றுமதிப் பண்டங்கள், முக்கியமாகப் பட்டு, ரோமப் பேரரசை சென்றடைந்தன.
(ii) வடபகுதியில் பண்பாட்டில் பின் தங்கிய ஆட்சியாளர்களின் கைவினைஞர்களும், கால்நடை மேய்ப்பர்களும் குதிரைகளுக்கான காப்புக்கவசம், சேணம், குதிரையில் பயணிப்போர் பாதங்களை வைத்துக் கொள்வதற்கான அங்கவடி, போன்ற புதிய நுட்பங்களையும், பாலங்கள் கட்டுதல். மலைப்பகுதிகளில் சாலைகள் அமைத்தல், கடற்பயணம் செய்தல் ஆகியவற்றிற்கான தொழில் நுட்பங்களால் ஹன் பேரரசு பரப்பளவிலும் செல்வச் செழிப்பிலும் ரோமுக்கு நிகராக நின்றது.

5) புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.

**பதில் :** 1. புனித சோபியா ஆலயம் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டதாகும்.
2. அக்கால ஐரோப்பாவின் மிக நேர்த்தியான கட்டடமான இத்தேவாலயம் அதன் புதுமையான கட்டடக்கலை நுணுக்கங்களுக்குப் பெயர் பெற்றதாகும்.
3. கான்ஸ்டான்டிநோபிள் நகரை உதுமானிய துருக்கியர் கைப்பற்றியபோது இத்தேவாலயம் ஒரு மசூதியாக மாற்றப்பட்டது.

6) கிரேக்கர் எந்தெந்த துறைகளில் வளர்ச்சி அடைந்தனர்?

**பதில் :** (i) கிரேக்கர்கள் அறிவியல், கணிதம். தத்துவம் ஆகிய துறைகளில் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டனர்.
(ii) வடிவியல் (geometry) கணிதம் தொடர்பான அடிப்படைத் தேற்றங்களை யூகிளிட் முறைப்படுத்தினார்.
(iii) ஏரோட்டோஸ்தனிஸ் பூமியின் விட்டத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டார்.
(iv) ஹிப்பார்கஸ் முக்கோணவியலைக் கண்டுபிடித்தார்.
(v) ஹிப்பார்கசின் கருத்துக்களை கொண்டு கோள்களும் நட்சத்திரங்களும் எவ்வாறு நகர்கின்றன என்பது குறித்த ஒரு மாதிரி அமைப்பை டாலமி உருவாக்கினார்.

7) செவ்வியல் உலகம் குறிப்பு வரைக.

**பதில் :** பண்டைய கிரீஸ் மற்றும் ரோமை உள்ளடக்கியதே செவ்வியல் உலகமென்றும், ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பண்டைய கிரேக்க ரோமானிய நாகரிகங்களை உள்ளடக்கிய காலமே செவ்வியல் காலம் என்றும் அறியப்படுகிறது.

8) சாக்ரடீஸ் மீதுயுள்ள குற்றச்சாட்டு யாது? அவரின் இறப்பு பற்றி எழுதுக.

**பதில் :** சாக்ரடீஸ் முன்வைத்த வழிமுறைகளை அரசு ஏற்கவில்லை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட கடவுளை சாக்ரடீஸ் விரும்பவில்லை. இதனால்சாக்ரடீஸ் அரசுக்கு எதிராக செயல்படுவதாகவும், இளைஞர்களை தவறான பாதைக்கு அழைத்து சென்றார் எனவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு குற்றவாளி என தீர்மானித்து விஷம் பருகச் செய்து மரணம் அடைந்தார்.

9) பைசாண்டிய நாகரிகம் என்றால் என்ன?

**பதில் :** ரோமானியர்கள் தங்கள் நாகரிகத்தை கான்ஸ்டாண்டிநோபிளை தலைநகராகக் கொண்ட கிழக்கு பகுதியில் தொடர்ந்தனர். இது பைசாண்டிய நாகரிகம் என அழைக்கப்படுகிறது.

10) அகஸ்டஸின் ஆட்சியில் ரோமானியர்கள் உலகுக்கு அளித்த பங்களிப்பு யாது?

**பதில் :** அகஸ்டஸின் ஆட்சியில் அறிவியல், தொழில் நுட்பம், சுட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை வளம் பெற்றது. இது ரோமானியர்கள் உலகிற்கு அளித்த பங்களிப்பாகும்

## 3 மதிப்பெண் வினாக்கள்

5 x 3 = 15

11) செவ்வியல் உலகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நாடுகள் யாவை?

**பதில் :** 1. கிரீஸ்
2. ரோம்
3. சீனா

12) ஏதென்ஸ் நகர மக்களாட்சி பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. ஏதென்சில் அடித்தள மக்கள் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக குழு ஆட்சியும், கொடுங்கோலாட்சியும் அகற்றப்பட்டு மக்களாட்சி முறை நிறுவப்பட்டது,
2. ஏதென்சில் சட்டம் இயற்றும் அதிகாரம் அனைத்தும் சுதந்திர மக்கள் பங்கேற்கும் மக்கள் மன்றத்தின் வசம் வழங்கப்பட்டிருந்தது,
3. நீதிபதிகளும் கீழ்நிலை அதிகாரிகளும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
4. இம்முறை சமூகத்தின் மேல்தட்டு மக்களால் வெறுக்கப்பட்டது, அவர்கள் மக்களாட்சியை 'கும்பலின் ஆட்சி' எனக் கருதினர்.

13) சாக்ரடீஸ் பற்றி நீ என்ன அறிவாய்?

**பதில் :** 1. பெரிகிளசின் சகாப்தத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்களில் மகத்தானவர் சாக்ரடீஸ்.
2. அவர் பல சிக்கல்கள் மிகுந்த பிரச்சனைகள் பற்றிய விவாதங்களின் வழியாக உண்மை வெளிப்படும் என கருதினார்.
3. பெரிக்ளிஸிற்குப் பின்னர் வந்த அரசாங்கம் உண்மையைக் கண்டறிய சாக்ரடீஸ் முன்வைத்த வழிமுறைகளை விரும்பவில்லை.
4. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கடவுள்களை சாக்ரடீஸ் ஏற்றுக் கொள்ள மறுத்தார் என்றும் இளைஞர்களைத் தவறான சிந்தனைக்கு இட்டுச் சென்றார் என்றும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.
5. நீதிமன்றக்குழு நடுவர் சாக்ரடீஸை குற்றவாளி எனத் தீர்மானித்து அவர் விஷம் அருந்தி உயிர்விடும்படி தீர்ப்பு வழங்கினார்.

14) கிரேக்கர்களின் அறிவியல், கணித அறிவு பற்றிக் கூறுக.

**பதில் :** 1. கிரேக்கர்களின் அறிவியல், கணிதம், தத்துவம் ஆகிய துறைகள் கிரேக்க - எகிப்திய நகரமான அலெக்ஸாண்டிரியாவில் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டன.
2. வடிவியல் கணிதம் தொடர்பான அடிப்படைத் தோற்றங்களை யூகிளிட் முறைப்படுத்தினார்.
3. எரோட்டோஸ்தனிஸ் பூமியின் விட்டத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டார்.
4. ஹிப்பார்கஸ் முக்கோணவியலைக் கண்டுபிடித்தார்.
5. கோள்களும் நட்சத்திரங்களும் எவ்வாறு நகர்கின்றன என்பது குறித்த ஒரு மாதிரி அமைப்பை டாலமி உருவாக்கினார்.

15) அடிமைகளின் கிளர்ச்சிகள் பற்றி எழுதுக.

**பதில் :** 1. கிரேக்கத்தைக் காட்டிலும் ரோமில்தான் அடிமைகளின் கிளர்ச்சிகள் அதிகம் நடந்தன.
2. ஸ்பார்டகஸின் கிளர்ச்சியே அவற்றுள் புகழ்பெற்றதாகும்.
3. 70,000 அடிமைகள் பங்கேற்ற அக்கிளர்ச்சி கி.மு. (பொ.ஆ.மு) 73 ல் தொடங்கியது.
4. இப்புரட்சி ரோமின் அதிகாரத்தை அச்சங்கொள்ளச் செய்தது.
5. இறுதியில் ஸ்பார்டகஸ் கொல்லப்பட்டு புரட்சி ஒடுக்கப்பட்டது. அவரைப் பின்பற்றிய 60000 புரட்சியாளர்களும் கொல்லப்பட்டனர்.

## 5 மதிப்பெண் வினாக்கள் 5 x 5 = 25

16) ஏதென்ஸின் எழுச்சி, வளர்ச்சி ஆகியவற்றையும் அதன் சிறப்புமிக்க கொடைகளையும் சுட்டிக் காட்டுக.

**பதில் : ஏதென்ஸின் எழுச்சி:**
(i) ஏதென்சில் அடித்தள மக்கள் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக குழு ஆட்சியும். கொடுங்கோலாட்சியும் அகற்றப்பட்டு மக்களாட்சி முறை நிறுவப்பட்டது.
(II) ஏதென்சில் சட்டம் இயற்றும் அதிகாரம் அனைத்தும், சுதந்திர மக்கள் (Freemm) பங்கேற்கும் மக்கள் மன்றத்தின் வசம் வழங்கப்பட்டிருந்தது.
(iii) நீதிபதிகளும் கீழ்நிலை அதிகாரிகளும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
(iv) இம்முறை சமூகத்தின் மேல்தட்டு மக்களால் வெறுக்கப்பட்டது. அவர்கள் மக்களாட்சியைக் கும்பலின் ஆட்சி எனக் கருதினர்.
(v) பல கிரேக்க நகர அரசுகளின் வரலாறு பணம்படைத்த நிலப்பிரபுக்கள் மக்களாட்சியை எதிர்த்து நடத்திய தொடர் போராட்டங்களாகவே அமைந்தது.
(vi) இவற்றில் விதிவிலக்காக இருந்தது ஏதென்ஸ் மட்டுமே. அங்கு மக்களாட்சிமுறை 200 ஆண்டுகள் நீடித்தது.
**வளர்ச்சி:**
(i) ஏதென்ஸ் நகர் பெரிகிளிஸ் என்னும் மாபெரும் தலைவரைப் பெற்றிருந்தது. அவர் முப்பதாண்டு காலம் அதிகாரத்தில் இருந்தார்.
(ii) இவருடைய ஆட்சியின் போது ஏதென்சும் ஸ்பார்ட்டாவும் ஒன்றுக்கெதிராக மற்றொன்று தொடர்ந்து போர் செய்தன. இப்போர்கள் பெலப்போனேசியப் போர்கள் என அறியப்பப்பட்டன.
(iii) ஸ்பார்டாவோடு பகைமை, அந்நகர அரசு செய்த இடையூறுகள் ஆகியவை இருந்தபோதிலும் அவற்றையும் மீறி ஏதென்ஸ் பிரமிக்கச் செய்யும் கட்டடங்களைக் கொண்ட உன்னதமான நகரமாக மாறியது.
(iv) மாபெரும் கலைஞர்களும் சிந்தனையாளர்களும் அந்நகரத்தில் இருந்தனர். ஆகவே வரலாற்று அறிஞர்கள் இக்குறிப்பிட்ட காலத்தைப் 'பெரிகிஸிசின் காலம்' என அழைக்கின்றனர்.
**கொடைகள்:**
(i) புகழ்பெற்ற கிரேக்க வரலாற்று அறிஞர்களான ஹெரோடோட்டசும், அவர் பின்வந்த தூசிடைடிசும் இக்காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.
(ii) பெரிகிளிசின் சகாப்தத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்களுள் மகத்தானவர் சாக்ரடீஸ் ஆவார்.
(iii) பிளாட்டோ, அரிஸ்டாட்டில், டெமோகிரைட்ஸ். எபிகியூரஸ் இக்காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.
(iv) பிளாட்டோவின் சீடரான அரிஸ்டாட்டில், இயற்பியல் உலகம், சமூக உலகம் பற்றிய கண்டுணர்ந்த அனுபவ அறிவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

17) செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுதுக.

**பதில் :** (i) குஷாணர்கள் காலம் ரோமனியப் பேரரசின் இறுதி காலகட்டமான ஜூலியஸ் சீசரின் ஆட்சி காலத்தின் சமகாலமாகும்.
(II) ஜூவியஸ் சீசரின் காலத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த அகஸ்டஸ் சீசர் அவைக்கு குஷாணர்கள்
(iii) ஒரு தூதுக்குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. (III) செவ்வியல் காலத்தின் சமகாலமான சங்ககாலத்தில் (கி.மு.பொ.ஆ.மு) 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. (பொ.ஆ) -3ம் நூற்றாண்டில் பதினெண் மேல்கணக்கு என்றழைக்கப்படும் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தொகுக்கப்பட்டன.
(iv)சங்க இலக்கியம் இந்தியாவின் முதல் சமயச் சார்பற்ற இலக்சியம் என போற்றப்படுகிறது.
(v) செவ்வியல் காலத்தின் இறுதிக் காலத்துடன் (நான்கு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகள்) பொருந்திய களப்பிரர் காலத்தில் பாபிலோனியா, எரிப்து, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகியவற்றோடு மலபார் கடற்கரை வழி நடந்த வணிகம் மேலும் செழிப்படைந்தது.
(vi) தேக்கு, மிளகு மணிகள் மற்றும் தந்தம் போன்றவை ஏற்றுமதியாயின.

18) உலக நாகரிகத்திற்கு ரோமின் பங்களிப்பை சுட்டிக் காட்டு.

**பதில் :** ரோமானிய மரபின்படி கி.மு. 509ல் எட்ரஸ்கன்கள் அகற்றப்பட்ட பின்னர் ரோமக் குடியரசை நிர்வகித்தவர்கள் பாட்ரீசியன் என்றழைக்கப்பட்ட செல்வந்த நிலப் பிரபுக்களாவர். செனட்டர்களும், கான்சல்களும் நிலப்பிரபுக்களின் நலன்களைப் பாதுகாதாரர். ரோமில் போர்க் கைதிகள் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். பணம் படைத்தவர்கள் இவ்வடிமைகளைக் குறைந்த விலைக்கு வாங்கி தங்கள் நிலங்களில் வேளாண் பணிகளில் ஈடுபடுத்தினர். கிரேக்கத்தைக் காட்டிலும் ரோமில் தான் அடிமைகளின் கிளர்ச்சி அதிகம் நடந்தன. ரோமானியர் ஆட்சி காலத்தில் அதிக அளவில் ஆடம்பர பொருட்களான பட்டு, வாசனைத் திரவியங்கள், மிளகு, விலையுயர்ந்த ஆபரணக் கற்கள் போன்றவை கீழ்த்திசை நாடுகளிலுருந்து வந்து குவிந்தன. கோவில்கள், கலையரங்குகள், திறந்த வெளி விளையாட்டு அரங்குகள், உடற்பயிற்சிக் கூடங்கள், கால்வாய்கள், குளியலிடங்கள், வட்டரங்குகள், சந்தைகள், பெரிய நகரங்கள் ஆகியன இக்காலத்தில் எழுதப்பட்டன. அகஸ்டஸ்கி.மு 27ல் அரசரானார். அவர் தன்னைப் பேராசன் என அழைத்துக் கொண்டார். பணம் படைத்தோர் ஏழைகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக விளையாட்டுகளை ஏற்பாடு செய்தனர். சண்டைக்காட்சி வீரர்களை மோதவிட்டு யாரேனும் ஒருவர் கொல்லப்படுகின்ற வரையிலான கட்டாயச் சண்டைகளை மக்கள் கூடுகின்ற அரங்குகளில் நடத்தினர்.
அகஸ்டஸில் காலத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளின் மூலம் நாட்டிற்குப் பெருமை சேர்த்தனர். பிளினி என்பவர் அறிவியல் கலைச் கலைஞ்சயத்தை எழுதினார். அதனை அவர் "இயற்கை வரலாறு" என அழைத்தார். செனிக்கா என்பவர் அறிவியல் தொடர்பான களைக் களஞ்சியத்தை உருவாக்கினார். அவர் தன்னுடைய "ஓட்ஸ்" என்னும் நூலில் ஹேரெஸ், எப்பியூக்கியசின் தத்துவங்களை நியாயப்படுத்துவதையும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும்போது இருக்க வேண்டிய மனோதைரியம் பற்றி ஸ்டாய்க் தத்துவம் முன் வாய்த்த கருத்துகளையும் இணைத்து புதிய தத்துவத்தை உருவாக்கினார். லிவி ஒரு சிறந்த உரைநடையாளர் ஆவர். மிகச் சிறந்த வரலாற்று அறிஞர் டேசிடஸ் ஆவர். வெர்ஜில் எழுதிய ஏனெயிட் ரோமானிய ஏகாதிபதியத்தைப் புகழ்வதாய் அமைந்தது. இக்காலத்தில் ரோமானியச் சட்டம் மேலங்கியை வளர்ச்சி அடைந்தது. மார்க்ஸ் அரிலியஸ் ஒரு தத்துவ அறிஞர் ஆவர். சீனாவிற்கு ஒரு தூதுக் குழுவை அமைத்து ஒரு ஆசிய நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்திய முதல் ரோமானியப் பேராசர் இவரே ஆவர்.

19) பாரசீகத்தினர் மீதான கிரேக்கத்தின் வெற்றியை விவரிக்கவும்.

**பதில் :** 1. பாரசீகப் பேரரசரான டேரியஸ் கிரேக்க நகர அரசுகளைக் கைப்பற்றுவது என முடிவு செய்தார்.
2. கிரேக்கத்தின் மீதான பாரசீகத்தின் முதல் தாக்குதல் தோல்வியில் முடிந்தது.
3. படையெடுப்பின்போது ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையும், நோய்களின் தாக்குதல்களும் பாரசீகத்தின் தோல்விக்குக் காரணமாயிற்று.
4. நாட்டுப்பற்றால் உந்தப்பட்ட கிரேக்கர்கள் வீரத்துடன் போரிட்டு கி.மு (பொ.ஆ.மு) 490 - ல் மராத்தான் என்னுமிடத்தில் பாரசீகப்படைகளைத் தோற்கடித்தனர்.
5. டேரியஸிற்குப் பின்னர் அரசப் பதவியேற்ற ஜெர்சக்ஸ் மீண்டும் ஒருமுறை படையெடுத்தார்.
6. இம்முறை ஸ்பார்ட்டன் படைகளோடு சேர்ந்து ஏதென்ஸ் நகர மக்கள் பாரசீகப் படைகளை முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தினர்.
7. சில நகர அரசுகள் சரணடைந்தபோதிலும் ஏதென்ஸ் பின்வாங்க மறுத்தது,
8. சலாமிஸ் என்னுமிடத்தில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் பாரசீகப் போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.
9. தம் எண்ணம் நிறைவேறாததால் மனமுடைந்த ஜெர்சக்ஸ் நாடு திரும்பினார்.

20) கிறித்தவத்தின் எழுச்சி பற்றி விவரிக்கவும்.

**பதில் :** 1. டேவிட் மற்றும் சாலமன் ஆகியோரின் ஆட்சியின் போது ஒரு குறுகிய கால புகழுக்குப்பின் யூத இன மக்கள் பெரும் வீழ்ச்சியை சந்தித்து உச்சக்கட்ட துயரங்களை அனுபவித்தனர்.
2. ரோமானியப் பேரரசின் பல பகுதிகளிலும் ஏனைய நாடுகளிலும் பரவியிருந்த அவர்கள், தங்களின் பழங்காலப் பெருமையை மீட்டுத்தர ஒரு மீட்பர் வருகை தருவார் என நம்பினர்.
3. தொடக்கத்தில் அவர்கள் ஏசுவின் மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.
4. ஏசு பணம் படைத்தோரையும், பேச்சுமாறி செயல்படுவோரையும் எதிர்த்தார். சில நடைமுறைகளையும் சடங்குகளையும் கண்டனம் செய்தார்.
5. சமயக் குருமார்கள் இப்போக்கை விரும்பவில்லை என்பதால் அவர்கள் ஏசுவைப் பிடித்து ரோமானிய ஆளுநர் போன்டியஸ் பிலாத்துவிடம் ஒப்படைத்தனர்.
6. ரோமானிய ஆட்சியாளர்கள் ஏசுவை ஒரு அரசியல் கிளர்ச்சியாளராய்க் கருதியதால் அவர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.
7. ஏசு சிலுவையிலறைந்து கொல்லப்பட்டபின் புனித பால் கிறித்தவ மதக் கொள்கைகளைப் பரப்பத் தொடங்கினார்.
8. பால் தனது முயற்சியில் வெற்றி பெற்றார். கிறித்தவம் படிப்படியாகப் பரவியது. ரோமானியர்கள் கிறித்தவ மதத்தை ஏற்றுக் கொண்டனர்.
9. ஆனால் பேரரசருடைய உருவச் சிலைக்கு கிறித்தவர்கள் மரியாதை செய்ய மறுத்ததால் அவர்கள் பல துன்புறுத்தல்களுக்கு ஆளானார்கள்.
10. இருந்த போதிலும் ரோமானியப் பேரரசு கிறித்தவர்களை ஒடுக்குவதில் வெற்றி பெறவில்லை.
11. ரோமானியப் பேரரசர்களில் ஒருவரான கான்ஸ்டன்டைன் கிறித்தவராக மாறியதால் கிறித்தவம் பேரரசின் அரசு மதமாயிற்று.